ஆலோசனை...




சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வியாழக்கிழமை காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற முதல்வருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டம்.

# சென்னை குடிநீர் ஏரிகள் 50 சதவீதம்கூட நிரம்பவில்லை

**சென்னை, நவ.14:** தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி ஒரு மாதமாகியும் சென்னைக்கு குடிநீர் வழங்கும் 5 முக்கிய ஏரிகள் நிரம்பவில்லை. இந்த ஏரிகளில் 43.58 சதவீதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீராதாரங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கண்ணன் கோட்டை ஆகிய 5 ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11,757 மில்லியன் கன அடி. இதில் வியாழக்கிழமை நிலவரப்படி 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் 2,401 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் 1,849 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

இதேபோல், 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியில் 458 மில்லியன் கன அடியும் மற்றும் சோழவரம் ஏரியில் 113 மில்லியன் கன அடியும், கண்ணன்கோட்டை ஏரியில் 303 மில்லியன் கன அடியும் நீர் இருப்பு உள்ளது. மொத்தம் 5 ஏரிகளில் 5,124 மில்லியன் கன அடி (43.58 சதவீதம்) தண்ணீர் இருப்பு உள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இது 3,620 மில்லியன் கன அடி நீர் குறைவு. கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே 5 ஏரிகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமாக நீர் இருப்பு இருந்தது. ஆனால், இப்போது பாதி அளவுக்கும் குறைவாகவே நீர் இருப்பு உள்ளது.

வடகிழக்குப் பருவமழை அக்.15-ஆம் தேதி தொடங்கி தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இருப்பினும், ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதுமான அளவு மழை பெய்யவில்லை என்பதால் ஏரிகள் நிரம்பாமல் உள்ளன. வடகிழக்கு பருவமழை காலம் டிசம்பர் மாதம் இறுதியுடன் முடிவடையும் என்பதால் அதற்குள் கன மழை பெய்தால் தான் ஏரிகள் நிரம்பும் சூழல் உள்ளது. ஏரிகள் நிரம்பாவிட்டால் சென்னை மக்களுக்கு அடுத்தாண்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று குடிநீர் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பு அதிகரிப்பு: டிஜிபி

**சென்னை, நவ.14:** மருத்துவர் கத்தியால் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிவிப்பு: தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்கெனவே பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பு பணியில் உள்ள போலீஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இரவுப் பணியில் இருக்கும் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரோந்து மற்றும் கண்காணிப்பில் கூடுதல் போலீஸார் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதாவது விரும்பத்தகாத நிகழ்வுகள் கவனத்துக்கு வந்தால் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தொடர்பாக குறைபாடுகள் இருந்தால், சம்பந்தப்பட்ட மருத்துவமனை முதல்வர்கள் மற்றும் பொறுப்பு அதிகாரிகளை தொடர்புகொண்டு ஆலோசனை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது என அதில் தெரிவித்துள்ளார் டிஜிபி சங்கர் ஜிவால்.

## காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பணியிடை நீக்கம்

**சென்னை, நவ.14:** சென்னையில் கைதியை சிறைக்கு அழைத்துச் சென்றபோது வாகனத்தில் மது அருந்திய சிறப்பு உதவி ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

சென்னை பரங்கிமலையிலுள்ள ஆயுதப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிபவர் லிங்கேஸ்வரன். இவர் கைதிகளை அழைத்துச் செல்லும் காவல்துறை வாகனத்தில் அமர்ந்து கொண்டு காவல் துறை சீருடை அணியாமல் மது அருந்தும் விடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

மேலும், இந்த காட்சி தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகள் வாட்ஸ் ஆப் குழுவிலும் பரவியது. இதையடுத்து லிங்கேஸ்வரனிடம் காவல் துறை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில், லிங்கேஸ்வரன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

THE NEW INDIAN EXPRESS GROUP

Presents

RAMNATH GOENKA SAHITHYA SAMMAN
·2024·

An award that celebrates the magic of words, and honours authors for their literary excellence.

Instituted in memory of our visionary founder Ramnath Goenka; the second edition of the award ceremony will be held on

November 15, 2024 | 4:30 PM

at Leader's Lounge, Bharat Mandapam
Pragati Maidan, New Delhi - 110 001

Chief Guest
Pujya Swami Swaroopanandaji
Global Head, Chinmaya Mission

Associate Sponsors
TVS
GATEWAY DISTRIPARKS

ENTRY BY INVITATION ONLY

## மாநகர் போக்குவரத்துக் கழக மண்டலங்கள் அதிகரிப்பு

**சென்னை, நவ.14:** நிர்வாக வசதிக்காக, மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மண்டலங்கள் 8-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் புறநகரில் மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை 7 மண்டலங்களுக்குள்பட்ட 32 பணிமனைகளிலிருந்து இயக்கப்படுகின்றன. இந்த மண்டலங்களை அதிகரிப்பது தொடர்பாக, நிர்வாக மேலாண் இயக்குநர் ஆல்பி ஜான் வர்கீஸ் வெளியிட்ட அறிவிப்பு:

மாநகர பேருந்துகளை சிறப்பாக பராமரிக்கவும், இயக்குவதற்கும் ஏதுவாக மாநகர போக்குவரத்துக் கழகத்தின் 7 மண்டலங்கள் 8-ஆக அதிகரிக்கப்படுகின்றன. அதன்படி, அடையாறு, குரோம்பேட்டை, வடபழனி, அயனாவரம், அண்ணாநகர், தண்டையார்பேட்டை ஆகியன இயக்க மண்டலமாகவும், வடக்கு, தெற்கு என்னும் 2 தொழில்நுட்ப மண்டலமாகவும் பிரிக்கப்படுகிறது. இதையொட்டி, உதவி மேலாளர், துணை மேலாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட பணிநிலைகளில் உள்ள 20 அதிகாரிகளும் பணியிட மாற்றம் செய்யப்படுகின்றனர். மேலும், இயக்கப் பிரிவின் உதவி மேலாளர் என்னும் பணியிடம் வருவாய்-வடக்கு, தெற்கு உதவி மேலாளர் என்றும் வகை மாற்றம் செய்யப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.ஜி. காலனி மீன் சந்தை புதுப்பிக்கும் பணி தீவிரம்

**சென்னை, நவ.14:** காசிமேடு சி.ஜி.காலனியில் உள்ள பழைய மீன் சந்தை நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

வடசென்னையின் தண்டையார்பேட்டை மண்டலத்துக்குட்பட்ட காசிமேடு சி.ஜி.காலனியில் உள்ள பழைமையான மீன் சந்தையை புதுப்பிக்கும் பணி சமீபத்தில் தொடங்கப்பட்டது. விரைவில் பணி நிறைவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மீன் சந்தை கொண்டுவரப்படும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது: காசிமேடு அடுத்த சி.ஜி. காலனியில் உள்ள மீன் சந்தையின் மறுகட்டுமானப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் 18 மாதத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதில் 48 கடைகள் அமையவுள்ளன. கடைகள் அனைத்தும் விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் எளிதில் அணுகும் வகையில் அமைக்கப்படுகிறது. விரைவில் பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றனர்.

WANTED
WELFARE OFFICER
Eligibility : Master degree in Labour Management awarded by the Tamil Nadu Institute of Labour Studies, Chennai or by any University, or Post Graduate degree in Social Work with 3 to 5 Years experience, preferably from manufacturing industry. Knowledge of Tamil is Must.
SAFETY OFFICERS
Eligibility : Diploma or Graduate in Engineering / Technology or Graduate in Physics / Chemistry or Diploma or Degree in Industrial Safety from Regional / Central Labour Institute or ME in Industrial Safety from colleges, as approved by the Chief Inspector of Factories (CIF) with 5 to 8 years experience and 10 to 15 years of experience may also be considered, preferably from manufacturing industry, willing to work in all shifts. Knowledge of Tamil is Must.
Please send your resume within 15 days to:
Post Box No. 5285,
Tiruvottiyur High Road,
Chennai - 600 019.

**IN THE COURT OF THE CITY CIVIL & SESSIONS JUDGE AT BANGALORE**
**CCH- 44**
**P & SC No. 568 / 2024**

**BETWEEN: MR. KRISHNA RAGHAVAN,** S/o Mr. V.G Raghavan, aged about 48 years Residing at No 33, Classic Orchards Khotanur, Uttarahalli, Hobli, Bangalore South Taluk-560076 … **PETITIONER**

**AND:** Nil … **RESPONDENT**

**NOTICE**

WHEREAS the Petitioner above named has made an application under Section 370, 371 and 372 of the Indian Succession Act, 1925 for grant of succession certificate in respect of the properties described in the Schedules A and B below, left behind by Late Mrs. Padma Raghavan, who passed away in Bangalore on 25.05.2024. The Petitioner is the son of Late Mrs. Padma Raghavan.

The aforesaid petition is posted for hearing on **19.11.2024** at 11.00 A.M in the Court mentioned above. Any person/s having any objection to the grant of Letters of Administration in this respect on the estate left behind by Late Mrs. Padma Raghavan, may come and see the proceedings before the grant of Succession Certificate in favour of the Petitioner.

**SCHEDULE-A**

**Item - 1:** All that piece and parcel of shares and stocks in various companies including any bonus/dividends accruing thereon, standing in the name of Late Mrs. Padma Raghavan, in Demat Account in National Securities Depository Limited maintained by HDFC Bank Limited bearing DP ID No. IN301549, and Client ID No. 17370678.

**Item - 2:** All that piece and parcel of other shares and stocks standing in the name of Late Mrs. Padma Raghavan, including any bonus/dividends accruing thereon, NOT included in the Demat Account maintained by HDFC Bank Limited bearing DP ID No. IN301549, and Client ID No. 17370678.

**SCHEDULE-B**

A sum of Rs. 70,00,000/- (Rupees Seventy Lakhs Only), out of which Rs. 35,00,000/- (Rupees Thirty-Five Lakhs Only) including interest thereon is due and payable by Mrs. M. Visalakshi, wife of K. Mitra, aged about 53 years, residing at Plot No. 1, E.B. Colony, 3rd Street, 1st Cross Street, Adambakkam, Chennai. 600 088, to Late Mrs. Padma Raghavan, under the Memorandum of Deposit of Title Deeds dated 25.01.2018 registered as Document No. 462/2018.

Given under my hand and seal of the Court, this 4th day of November, 2024.

By order of the Court, Assistant Registrar, City Civil Court, Bangalore

Advocate for Petitioner: **Neeraj Sastry**
**TLaw Chambers**
New No. 304A, St. Patrick's Complex
Brigade Road, Bangalore – 560 025.

Great Place To Work. Certified APR 2024 – APR 2025 INDIA

refex

ET NOW BEST ORGANISATIONS FOR WOMEN 2024

# ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 2வது தளம், எண்.313, ரீஃபெக்ஸ் டவர்ஸ், ஸ்டெர்லிங் ரோடு, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034, தமிழ்நாடு | தொலைபேசி: 044-4340 5950 | இணையதளம்: www.refex.co.in | CIN எண்: L45200TN2002PLC049601

ASH & COAL HANDLING | REFRIGERANT GASES | POWER TRADING

**2024 செப்டம்பர் 30 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளின் சாரம்** (₹ இலட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | தனித்து நிற்கும் | | | | | | தொகுக்கப்பட்ட | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
| | | செப் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | ஜூன் 30,2024 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்யப்பட்டது) | செப் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | ஜூன் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | செப் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2024 (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | இயக்க செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய் | 51,980.01 | 58,965.25 | 35,030.80 | 1,10,945.26 | 73,167.43 | 1,37,055.78 | 52,765.32 | 59,512.40 | 35,220.67 | 1,12,277.72 | 73,453.40 | 1,38,287.03 |
| 2 | விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய இலாபம் / (இழப்பு) | 4,964.78 | 4,805.82 | 3,186.56 | 9,770.59 | 6,197.07 | 13,183.53 | 4,174.73 | 3,906.37 | 3,030.86 | 8,081.12 | 5,969.53 | 12,146.26 |
| 3 | வரிகளுக்கு முந்தைய இலாபம் / (இழப்பு) (விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு) | 4,991.86 | 4,805.82 | 3,190.46 | 9,797.67 | 6,183.68 | 13,170.46 | 4,201.81 | 3,906.37 | 3,034.76 | 8,108.20 | 5,956.14 | 12,133.19 |
| 4 | வரிகளுக்கு பிந்தைய லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான, அசாதாரண உருப்படிகள் மற்றும் அசோஸியேட்ஸ்களின் பங்கிற்குப் பிறகு) | 3,731.60 | 3,596.82 | 2,340.25 | 7,328.39 | 4,541.62 | 10,094.72 | 3,106.15 | 2,934.67 | 2,143.76 | 6,040.83 | 4,270.96 | 9,297.87 |
| 5 | இக்காலாண்டுக்கான மொத்த விரிவான இலாபம் / (இழப்பு) | 3,730.49 | 3,596.82 | 2,329.87 | 7,327.28 | 4,531.24 | 10,076.63 | 3,106.52 | 2,934.67 | 2,133.38 | 6,041.20 | 4,260.58 | 9,280.08 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் ஒவ்வொன்றும் ரூ.2/- என்ற முகமதிப்பை கொண்டது | 2,414.21 | 2,313.63 | 2,210.70 | 2,414.21 | 2,210.70 | 2,313.63 | 2,414.21 | 2,313.63 | 2,210.70 | 2,414.21 | 2,210.70 | 2,313.63 |
| 7 | கையிருப்புத் தொகை (மறுமதிப்பீடு கையிருப்புத் தொகையைத் தவிர்த்து) | NA | NA | NA | NA | NA | 44,951.92 | NA | NA | NA | NA | NA | 44,244.19 |
| 8 | ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் (ரூபாயில்) | 3.12 | 3.11 | 2.12 | 6.23 | 4.11 | 9.12 | 2.60 | 2.54 | 1.94 | 5.14 | 3.86 | 8.40 |
| 9 | ஒரு பங்கிற்கு நீர்த்த வருவாய் (ரூபாயில்) | 3.10 | 3.06 | 2.10 | 6.17 | 4.08 | 9.08 | 2.58 | 2.50 | 1.93 | 5.09 | 3.84 | 8.36 |

குறிப்புகள்:

1. 2015, செபி [LODR] விதிமுறைகளின் விதி 33-ன் கீழ் பங்குச்சந்தையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும், 30 செப்டம்பர் 2024-ஆம் தேதியன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமே மேலே தரப்பட்டுள்ளது. நிதிசார் முடிவுகளின் முழு வடிவமும் பங்குச்சந்தை வலைதளங்களிலும் (www.bseindia.com & www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் வலைதளத்திலும் (www.refex.co.in) கிடைக்கப்பெறுகின்றன.
2. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 133-ன் கீழ், அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (IND-AS) நிறுவனத்தின் நிதிசார் முடிவுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. தேவைப்படும் இடங்களிலெல்லாம் ஒப்பீடு நோக்கிற்காக எண்கள் மறுகுழுவாக்கம் / மறுவகையாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகள் தணிக்கை குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, 13 நவம்பர், 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

~52% ↑ வருவாய் வளர்ச்சி H1 FY24 - H1 FY25

~61% ↑ PAT வளர்ச்சி H1 FY24 - H1 FY25

அக்வைட் ரேட்டிங் லிமிடெட்-ஆல் கிரெடிட் தரநிலை "BBB+"-லிருந்து "A-"ஆக (எதிர்கால வாய்ப்பு- "நிலையானது") உயர்த்தப்பட்டிருக்கிறது

இடம்: சென்னை
தேதி: 13 நவம்பர், 2024

இயக்குநர்கள் குழுவின் ஆணையின்படி
ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்-க்காக
**அனில் ஜெயின்**
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN: 00181960

www.refex.co.in | Refex Group | Refex Group | @GroupRefex | refexgroup